சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 10.11.2025
வா.சா.2 – பாண்டி S/o.அழகிரி
O.S. No.7/2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்காக அழைப்பாணை வரவில்லை. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை, ஆனால் என்னை வழக்கில் சாட்சி சொல்ல இந்த வழக்கின் 2ம் வாதி கண்ணதாசன் அழைத்து வந்துள்ளாரா என்றால் ஆமாம். வழக்கறிஞர் அலுவலகத்தில் நானும், 2ம் வாதியான கண்ணதாசனும் சேர்ந்து தான் முதல் விசாரணை வாக்குமூலத்தை தயாரித்தோமா என்றால் ஆமாம். இந்த வழக்கினுடைய சாராம்சம் என்னவென்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண். தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தானது, அம்பலக்காரன்பட்டி சர்வே எண்.558/2A, 2 ஏக்கர் 71 செண்டு ஆகும். சர்வே எண்.558/2ல் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 71 செண்டு ஆதியில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி 5 ஏக்கர் 71 செண்டில் மேற்கில் உள்ள 2 ஏக்கர் 71 செண்டு நான் பரமாயி மற்றும் சொக்கலிங்கம் ஆகியோரிடம் 05.09.1975ல் பதிவு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே 16.09.1970ல் பரமாயி, கருப்பணனுக்கு 5 ஏக்கர் 71 செண்டில் சர்வே எண்.558/2ல் கிழக்கே உள்ள 3 ஏக்கரை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நான் கருப்பணன் விவசாயம் செய்யும் போது நான் எதுவும் தடை செய்யவும் இல்லை, ஆட்சேபிக்கவும் இல்லை. மேற்கே உள்ள என்னுடைய 2 ஏக்கர் 71 செண்டில் கிரைய பத்திரமான 05.09.1975 கிரையபத்திரத்தின் நான்குமாலில் கிழக்கு புறத்தில் மேற்படி 3 ஏக்கர் கருப்பணன் கிரையம் வாங்கியது கண்டுள்ளது என்றால் சரிதான்.

கருப்பணன் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. கருப்பணன் இறந்த பின்னர் அவருடைய மகன் தவமணி 2ம் பிரதிவாதியை நான் தடை எதுவும் செய்தேனா என்றால் இல்லை. கருப்பணனனுக்கும்,2ம் வாதியின் அப்பா சொக்கலிங்கத்துக்கும் இடையே என்ன என்ன பிரச்சினை நடந்ததுஎன்பது நேரடியாகதெரியாது என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு தொடர்பாக சொத்தை அளந்து கொடுக்கவேண்டும் என்று கேட்டாரா என்றால் கேட்டார். மேற்படி 2 ஏக்கர் 71ல் உள்ள கிழக்கே உள்ள கருப்பணனுக்கு பாத்தியப்பட்ட 3 ஏக்கரில், 11 செண்டை பொறுத்து, ஆக்கிரமிப்பு இருப்பதை உறுதி செய்வதற்காக 2ம் பிரதிவாதி தவமணி அளந்து பார்க்கவேண்டும் என்று கூறினாரா என்றால் கூறினார். மேற்படி சொத்து அளந்து பார்க்கப்பட்டதா என்றால் அளந்து பார்க்கப்பட்டது. எனக்கும், வழக்கு சொத்திற்கும், சம்பந்தம் இல்லை என்றும் நான் 2ம் வாதி கண்ணதாசன் கேட்டுகொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.10 22:09:55 +0530

Sub Judge

Melur